ஓவியம் : கி.சொக்கலிங்கம்

## திராவிட இயக்க இதழ்கள் - 'புரட்சிப் பெரியார் முழக்கம்'


பெரியார் முழக்கம்
தமிழகத் தேர்தல் முடிவுகள் உணர்த்தும் பாடம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இதழ் 'புரட்சிப் பெரியார் முழக்கம்'.

இது திராவிடர் விடுதலைக் கழகத்தின் அதிகாரப்பூர்வ ஏடாக வெளியாகி வருகிறது. 1997-ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2001-ஆம் ஆண்டின் இறுதிவரை மாத இதழாக வெளிவந்து கொண்டிருந்த இது, 2002-ஆம் ஆண்டு முதல் வார ஏடாக வெளிவரத் தொடங்கியது.

தற்போது, அது மின்னிதழாகவும் வெளி வருகிறது. முந்தைய இதழ்களும் மின்னிதழ்களாக மாற்றப்பட்டு, அவை திராவிடர் விடுதலைக் கழகத்தின் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. இலவசமாகத் தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.

பெரும்பாலும் அரசியல் கட்டுரைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் பெரும்பாலான கட்டுரைகளை இதழின் ஆசிரியரே படைக்கிறார்.

கட்டுரைகள் தவிர, வினா-விடை, துணுக்குப் பத்திகள், தலையங்கம், ஆசிரியரது பொது நிகழ்ச்சி உரைகள் ஆகியவையும் இடம்பெற்று வருகின்றன.

## மாநாடு

ர.பிரகாசு **33**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**



# போர்க்களத்தில் ஓய்ந்தார், டி.எம்.நாயர்!

*மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்த அறிக்கையில் பார்ப்பனரல்லாதோர் நலனுக்காக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெறுவதற்காக, கப்பலில் இங்கிலாந்து புறப்பட்ட டி.எம்.நாயர், 1918-ஆம் ஆண்டு ஜூன் 19-ஆம் தேதி அந்நாட்டைச் சென்றடைந்தார். ஆனால், கப்பலில் இருந்து இறங்கியவுடனே அங்கு வந்த இங்கிலாந்து ராணுவ அதிகாரிகள், டி.எம்.நாயர் எந்தவொரு பொது இடத்திலும் எதையும் பேசக்கூடாது எனத் தடை விதித்தனர். அந்தத் தடை குறித்து, இங்கிலாந்து நாடாளுமன்றத்திலேயே பேசினார். மிகுந்த போராட்டத்திற்கு பிறகு, டி.எம்.நாயருக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டதுடன், நீதிக்கட்சியின் கொள்கை, குறிக்கோள் குறித்து, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் பேசவும் வாய்ப்பளிக்கப்பட்டது.*

*டி.எம்.நாயரின் பேச்சால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈர்க்கப்படவே, பார்ப்பனரல்லாதோரின் வகுப்புரிமைக் கொள்கைகளும் அவையில் விவாதப் பொருளாக மாறின. மாண்டேகு-செம்ஸ்போர்டு திட்டத்தை பரிசீலனை செய்யும் முடிவுக்கு வந்தது இங்கிலாந்து நாடாளுமன்றம். சுமார் 6 மாத கால போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியோடு நாடு திரும்பினார் டி.எம்.நாயர். சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து அண்ணா சாலையில் இருந்த நீதிக்கட்சி அலுவலகம் வரை டி.எம்.நாயருக்கு மிகுந்த உற்சாகத்தோடு வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*அதே உற்சாகத்தோடு 1919 -ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி இரண்டாவது மாநில மாநாட்டை சென்னையில் கூட்டியது நீதிக்கட்சி. இராவ் பகதூர் எம்.ஜி.ஆரோக்கியசாமி பிள்ளை மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார். பார்ப்பனரல்லாத மக்களின் நலனைப் புறந்தள்ளி விட்டதாக வரவேற்புரையிலேயே மாண்டேகு - செம்ஸ்போர்டுவைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார் ஆரோக்கியசாமி பிள்ளை. சுயமரியாதை உணர்ச்சி பற்றியும், பார்ப்பனரல்லாதோர் இயக்கம் குறித்தும் மிக விரிவாக எடுத்துரைத்தார் செல்லப்பள்ளி குமாரராஜா. இரு நாட்களிலும் டி.எம்.நாயர் உரை மிக வீரியமாக இருந்தது.*

*இரண்டாவது நாளில் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வகுப்புரிமைக்காக இங்கிலாந்து சென்று வாதிட்டு வந்த டி.எம்.நாயரைப் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மீண்டும் டி.எம்.நாயர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, இங்கிலாந்து அனுப்பி, பிரிட்டிஷ் அரசுக்கும் நாடாளுமன்றத்திற்கும் பார்ப்பனரல்லாதோர் கோரிக்கைகளை தெரியப்படுத்துவது என்று, மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*பார்ப்பனரல்லாதோர் நலனுக்கு எதிரான எதையும் துணிச்சலோடு எதிர்ப்பது என்ற முடிவுக்கும் வந்தது நீதிக்கட்சி. இம்மாநாடு முடிந்த கையோடு சவுத்பரோ பிரபு தலைமையிலான வாக்குரிமைக் கமிட்டி முன்பு சாட்சியம் அளிப்பதையே தவிர்த்துவிட்டது நீதிக்கட்சி. காரணம் இந்தக் கமிட்டியில் 2 உறுப்பினர்கள் பார்ப்பனர்கள். பார்ப்பனரல்லாதோருக்குத் தனி வாக்குரிமை இல்லை, பெண்களுக்கு வாக்குரிமை இல்லை போன்ற வாக்குரிமைக் கமிட்டியின் பாரபட்சமான முடிவுகளுக்கு எதிராகவும், மாநாட்டுத் தீர்மானப்படியும் நீதிக்கட்சியின் கோரிக்கையை முன்வைக்க, மீண்டும் தனது குழுவோடு இங்கிலாந்து புறப்பட்டார் டி.எம்.நாயர்.*

**அடுத்த ஆண்டே சென்னை மாகாணத்தில் ஆட்சியமைத்தது நீதிக்கட்சி. அதுவே வகுப்புரிமைக்கும் வழிகோலியது.**

*அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தபோதே, நீரிழிவு நோய் முற்றி, ஜூலை 17-ஆம் தேதி இங்கிலாந்திலேயே உயிர்நீத்தார் டி.எம்.நாயர். திராவிடச் சூரியன் ஓய்ந்தாலும், அவரது போராட்டம் ஓயவில்லை. அடுத்த ஆண்டே சென்னை மாகாணத்தில் ஆட்சியமைத்தது நீதிக்கட்சி. அதுவே வகுப்புரிமைக்கும் வழிகோலியது.*

**...கூட்டம் திரளும்**

## ஃப்ளாஷ்பேக்




பா.முருகேசன்

### 'முதலில் நாடு, பிறகு வீடு!'

06.02.1995 அன்று என்னுடைய சித்தப்பா சோம.செல்வபாண்டியன், சித்தி பிரேமா ஆகியோரின் திருமணம் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தலைமையில் சங்கரன்கோவிலில் நடைபெற்றது. அப்போது 8 வயது சிறுவனாக இருந்த நான், தளபதி அவர்களை வரவேற்று மகிழ்ந்தேன். என்னுடைய சகோதரர் தலைவரிடம் கையொப்பம் பெற்றார், அதில் 'முதலில் நாடு, பிறகு வீடு!' என்று எழுதி கையெழுத்துப் போட்டுத் தந்தார். இரண்டையும் இன்று வரை பாதுகாத்து வருகிறேன்.

**- பா.முருகேசன், சங்கரன்கோவில், தென்காசி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### காகம் தேசியப் பறவையா?

1957-ஆம் ஆண்டு, செப்டம்பர் 21-ஆம் தேதி இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்கு அழைப்பு விடுத்த பேறிஞர் அண்ணா, அக்டோபர் 13-ஐ இந்தி எதிர்ப்பு நாளாக அறிவித்தார். "இந்தி பேசுவோர் அதிகமாக இருப்பதைக் காட்டி, இந்தியை அலுவல் மொழியாக்கலாமா? காகம் அதிகம் இருக்கிறது. அப்படியெனில், மயிலுக்குப் பதில் காகத்தைத்தான் தேசியப் பறவையாக்க வேண்டும்?" என்ற அண்ணாவின் வாதம் பெரும் எழுச்சியைத் தோற்றுவித்தது.

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **33**

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# கழகத்தின் கருத்தாயுதம்!

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது குழந்தைகளைக் கையில் சுமந்த காலத்தை விடவும், முதல் பிள்ளையான முரசொலியைக் கையில் வைத்திருந்த காலம்தான் அதிகம். அரசியல்வாதியாவதற்கு முன்பே அவர் ஒரு பத்திரிகையாளராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். கலைஞர் அவர்களின் குடும்பமே முரசொலிக்காக உழைத்தது. படிக்க வேண்டிய நேரத்தில் எல்லாம் பேப்பர் மடித்தனர், முத்தமிழறிஞரின் பிள்ளைகள். இளைய பிள்ளைகள் ஒன்றுகூடி வளர்த்த மூத்த பிள்ளைதான் முரசொலி. அசாதாரணமான சூழ்நிலைகளிலும் தடைப்படாமல் முரசொலி வெளிவந்தது. 83 ஆண்டுகள் கடந்தும் வெளியாகி வருகிறது, 'மூப்பில்லா முரசொலி'.*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரப்பூர்வ நாளேடாக இன்றைக்கு அறியப்படும் முரசொலி, இத்தனை ஆண்டு காலம் நெருப்பாற்றில் நீந்திய வரலாற்றை 100 கட்டுரைகள் மூலம் நமக்களிக்கிறது, காலஞ்சென்ற முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய 'முரசொலி: சில நினைவலைகள்' புத்தகம்.*




*முரசொலியில் தொடராக வெளியான இந்த 100 கட்டுரைகள், 2021-ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டு கழகத்தின் முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் அவர்களால் வெளியிடப்பட்டது. கழகத் தலைவர் அவர்களும், கழகப் பொதுச் செயலாளர் அவர்களும் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.*

*500 பக்கங்கள் நீளும் இந்தத் தொகுப்பு தமிழ்நாட்டு அரசியலை ஆழக் கற்க விரும்புவோருக்கு அமிர்தம் என்றே சொல்லலாம். திருப்பும் பக்கங்களில் எல்லாம் புது புதுத் தகவல்கள், தியாக வரலாறுகள், செய்திப் புதையல்கள், சுவாரசியம் குன்றாத சம்பவக் குவியல்கள். இவற்றை எல்லாம் முரசொலி செல்வம் அவர்கள் நினைவிலிருந்து எப்படி எழுதினார் என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது.*

*'முரசொலி' இதழ் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் எப்படித் தொடங்கப்பட்டது என்பது முதல், காலந்தோறும் அது பரிணமித்து வந்த விதம், முரசொலி சந்தித்த நெருக்கடிகள், எதிர்கொண்ட ஒடுக்குமுறைகள், முறியடித்த தாக்குதல்கள், அம்பலப்படுத்திய பொய்கள், சந்தித்த சவால்கள் என 1942-ஆம் ஆண்டு தொடங்கி, 1992 வரையிலான 50 ஆண்டு கால வரலாறு நம் கண் முன் விரிகிறது, இந்நூல்.*

**முரசொலி தென்றலை தீண்டிய வரலாற்றைவிடத் தீயைத் தாண்டிய வரலாற்றை அதிகம் கொண்டு வெளியாகி இருக்கிறது.**

*நெருக்கடி நிலையின் போது ஜனநாயகம் காக்க, முரசொலி கருத்தாயுதம் தாங்கிய போர்க்கருவியாகவே பயன்படுத்தப்பட்டது, ஆளும் அரசால் ஊடகங்களின் கழுத்து நெரிக்கப்படும் போதெல்லாம் முரசொலித்தது. பல சமயங்களில் வன்முறைக்கு ஆளானபோதும் தொடர்ந்து வெளிவந்தது. அதன் உள்ளடக்கத்திற்காகவே வாசிக்கப்பட்ட வெகு சில அரசியல் பத்திரிகைகளுள் முரசொலி முதல் இடத்தைப் பெற்றிருந்தது. இப்படிப் பல்வேறு சாகச சம்பவங்களைக் கோர்வையாக 100 கட்டுரைகளில் உள்ளடக்கி, நமக்கு வழங்கியுள்ளார் முரசொலி செல்வம் அவர்கள். கழகம் எதிர்கொண்ட நெருக்கடிகளை எல்லாம் நமக்குக் கடத்தும் வரலாற்றுப் பெட்டகமாக வெளியாகி இருக்கிறது இந்தப் புத்தகம்.*


*முரசொலி இதழின் ஆசிரியராகப் பணியாற்றி தன் எழுத்துக்கென தனி முத்திரையைக் கொண்டிருந்த முரசொலி செல்வம் அவர்களின் இந்தப் புத்தகம், முரசொலி தென்றலை தீண்டிய வரலாற்றைவிடத் தீயைத் தாண்டிய வரலாற்றை அதிகம் கொண்டு வெளியாகி இருக்கிறது. முரசொலி செல்வம் அவர்கள் மறைவெய்திருக்கும் சூழலில், இந்த நூல் அவருடைய சிந்தனையை உயர்த்திப் பிடிக்கும்.*

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**630**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.